**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.141/2022 தேதி- 10.04.2026
(DW.1) – ரசலம்மாள்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.நான் இந்த வழக்கின் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி என் மகனின் மனைவி என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் என் கணவருக்கு உரிமைப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். என் கணவரின் பெயர் என்ன என்றால் வல்சலம் ஆகும். வல்சலத்தின் அப்பாவின் பெயர் என்ன என்றால் பொடியான் ஆவார். பொடியானின் அப்பாவின் பெயர் என்ன என்றால் அனந்தன் நாடார் ஆவார்.

2. இந்த வழக்கு சொத்து பூர்வீகமாக அனந்தன் நாடாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அனந்தன் நாடார் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். அனந்தன் நாடாரின் சகோதரர்கள் சேர்ந்து 1950 ஆம் வருடத்தில் ஒரு பாகபத்திரத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரம் இந்த வழக்கில் வா.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 பாகப்பத்திரத்தில் C பட்டிகை சொத்தும், E பட்டிகை சொத்தும் பொடியான் மற்றும் அவருடைய சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் நினைவில் இல்லை.

3. பொடியானின் சகோதரர்கள் சின்னநாடார், அமலதாஸ் என்ற இருவர் உண்டு என்றால் சரிதான். அனந்தன் நாடாருடைய சொத்து பொடியானுக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் சமமாக பிரிக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பொடியானுக்கு நான்கு ஆண் பிள்ளைகளும், மூன்று பெண் பிள்ளைகளும் உண்டு என்றால் சரிதான். பொடியானின் ஒரு மகன் தான் என் கணவர் வல்சலம் என்றால் சரிதான். என் கணவருடைய சகோதரர்கள் தர்மராஜ், தங்கதுரை, சுந்தர் ராஜ் ஆகியோர்கள் உண்டு என்றால் சரிதான்.

4. பொடியானின் சொத்தில் வல்சலத்திற்கும், தர்மராஜிற்கும், தங்கதுரைக்கும் மற்றும் சுந்தர் ராஜிக்கும் சமமான பாகம் உண்டு என்றால் தர்மராஜிற்கு கிடையாது, உயிரோடு இருக்கும் போது அவருக்கு உரிமைப்பட்ட சொத்தை எடுத்துக் கொண்டார், மற்றவர்கள் அவரவர் பாகத்தை பெற்றுக் கொண்டார்கள். நான்கு பேரும் பாகம் வைத்துக் கொண்டதற்கான ஏதாவது ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த ஆவணம் பாக பத்திரம் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

5. அவ்வாறு ஒரு பாகப்பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவை அனைத்தும் தவறானது என்று எடுத்துக் கொள்ளலாமா என்றால் சரியல்ல. பொடியானின் பிள்ளைகள் பாகப்பத்திரம் எதுவும் செய்துக் கொள்ளவில்லை என்றாலும், 1950 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாகப்பத்திரம் மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்ததாக இருந்த போது என் கணவர் அவருக்கு உரிமைப்பட்ட சொத்தை கிரயம் கொடுத்தார் என்றால் நினைவில் இல்லை. என் கணவர் வல்சலத்தின் மகன் வினோ அவருடைய மனைவி தான் வாதி என்றாலும், என் கணவர் வல்சலம் அவருடைய மகனான வினோ என்பவருக்கு கிரயம் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் இரண்டு மகன்களுக்கும் சமமாக தலா 4.250 சென்ட் எழுதிக் கொடுத்தார்.

6. மேற்சொன்ன கிரய ஆவணத்தில் எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். என் இரண்டு மகன்களுக்கு தலா 4.250 சென்ட் கொடுத்தது போக மீதம் என் கணவருக்கு சொத்து உள்ளது என்பதை காண்பிக்க ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. எந்த ஆவணம் உள்ளது என்றால் கர தீர்வை ரசீது உள்ளது. கர தீர்வை ரசீதை தவிர உரிமம் காட்ட எந்த ஆவணமும் இல்லை என்றால் குடும்ப சொத்து என்பதால் தீர்வை ரசீது உள்ளது.

7. தாவா சொத்து கிடப்பின் படி 15 சென்ட் சொத்து என்றால் சரிதான். 15 சென்ட் சொத்து வல்சலம், தர்மராஜ், தங்கதுரை மற்றும் சுந்தர் ராஜ் ஆகியோருக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் இல்லை. 15 சென்ட் யாருக்கு உரிமைப்பட்டது

என்றால் என் கணவருக்கு மட்டும் உரிமைப்பட்ட சொத்தாகும். என் கணவருக்கு 15 சென்ட் சொத்து உரிமைப்பட்டது என்று சொன்னால் மேற்சொன்ன இடத்தில் 60 சென்ட் சொத்து இருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

8. என் கணவர் சுந்தர்ராஜிற்கு மேற்சொன்ன 15 சென்ட்டில் 7.250 சென்ட் எழுதிக் கொடுத்துவிட்டார். தர்மராஜிற்கு உரிமைப்பட்ட சொத்தை அவருடைய காலம் வரை அனுபவித்து வந்தார் என்றால் அவர் உரிமைப்பட்ட சொத்தை அவர் விலைக்கு விற்றுவிட்டார். மேற்சொன்ன தர்மராஜ் அவருக்கு உரிமைப்பட்ட சொத்தை எங்களுக்கு விலைக்கு கொடுத்தாரா என்றால் இல்லை. தர்மராஜின் சொத்துக்கள் அவர் இறந்த பிறகு அவருடைய மனைவி தங்கத்திற்கு உரிமைப்பட்டது என்றால் அவர்களுக்கு உரிமைப்பட்ட சொத்துக்களை விலைக்கு விற்றுவிட்டார்கள்.

9. தங்கம் உயிரோடு இருந்த காலக்கட்டத்தில் அவருடைய சொத்தை என் மகனான வினோவிற்கு ஒரு உயில் ஆவணத்தின் மூலம் எழுதிக் கொடுத்தார் என்றால் இல்லை, அவ்வாறு சொத்து ஏதும் இல்லை. தாவா சொத்து குளத்தின் கரையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். என் கணவர் என் மகன் வினோவிற்கு எழுதிக் கொடுத்த சொத்தில் தான் வாதி வீடு அமைத்து வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).